[1982 மார்ச் 16

சைக்கிள் ரிக்ஷாக்களுக்கான உரிமம்.

*வினா எண். 491—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைக்கிள் ரிக்ஷாவிற்கான உரிமம், அவ்வண்டியை ஓட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சைக்கிள் ரிக்ஷாவிற்கான உரிமம் அவ்வண்டியை ஓட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது. இம்முடிவினை செயலாக்கும் பொருட்டு தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வாடகை வண்டிச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட முன் வடிவு இப்பேரவையில் ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சைக்கிள் ரிக்ஷாக்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ரத்து செய்வதற்கு, அதுபற்றிய யோசனை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, வேகம் குறைவாக ஓடுகின்றவைகளை அறவே நீக்கவேண்டும் என்று அரசு கருதுகிறது. எனவே, அப்படி குறைக்க வேண்டுமென்பதால், இப்போது அரசுகூட அந்த சைக்கிள் ரிக்ஷாக்களை மாற்றிவிட்டு, அதிலே எந்திரங்களைப்பொருத்திக் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அதற்காக, அரசாங்கப் பணத்தைகூட ஒதுக்கி, அதன்மீது இப்பொழுது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இந்த சைக்கிள் ரிக்ஷாக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி இந்தத் திட்டத்தை அமுல் படுத்துகின்றபோது, அதிலே வேலையில்லாத தொழிலாளர்களுக்கு மாற்று ஏற்பாடு என்ன? அதற்கு இந்த மாநில அரசு எவ்வளவு ரூபாய் செலவிடும் என்ற விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சைக்கிள் ரிக்ஷாக்களை ஒழிக்கின்றபோது, அந்த சைக்கிள்களில் எந்திரம் பொருத்தப்படுவதால், அந்தத் தொழிலாளர்கள் வேலை இழக்கின்ற நிலை ஏற்படாது. ஒருவேளை என்

1982 மார்ச் 16]

ணிக்கை குறையுமானால், அதற்கான முயற்சிகளை எடுத்து, அரசாங்கம் அவர்களுக்கு பாதுகாப்பான வேலைகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகம் முழுவதும் ரிக்ஷாக்களை தனியார், பணம் படைத்தவர்கள் வாங்கி, அதை வாடகைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வாடகை கொடுப்பதிலே கஷ்டப்படுகின்ற நிலைமை இருப்பதால், தனியார்களிடம் அந்த உரிமையை உடனடியாக ரத்து செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அதைத்தான் ஏற்கனவே சொன்னேன் யார், யார் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் சைக்கிள் ரிக்ஷா வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு இனிமேல் அனுமதி யில்லை. ஓட்டுநர்கள் மட்டும் தான் அனுமதியைப் பெற வேண்டுமென்று சொல்லி நாம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறேன். அப்படி எடுக்கிறபோது அவர்கள் தானாக வெளியிலே பேசுகிற சூழ்நிலை ஏற்படும்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் காலத்தில் கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டன. பிறகு சைக்கிள் ரிக்ஷாக்கள் வந்தன. சைக்கிள் ரிக்ஷாக்கள் அனைத்துமே அரசாங்கத்தினுடைய செலவிலே மோட்டார் பொருத்துவதற்கு கடனாக கொடுப்பதற்குத் திட்டம் வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் அவர்கள் பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அத்தனை திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திடம் பணம் இருக்குமா என்று கேட்டால் இருக்காது, அதை அவர் ஏற்றுக்கொள்வார் என்று கருதுகிறேன். இருந்தாலும் கூட அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலையை கருதி நம்முடைய கூட்டுறவு அமைப்பின் மூலமாக 1,000 ரூபாய் நிதியாக கொடுத்து, முன் பணமாக வழங்கி அதைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்ற திட்டம். அந்த ஆசை, இந்த அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS